**22.01.16**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த சில தினங்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை நிலவரத்தில் தமிழகத்தில் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி ஆகிய இடங்களில் 30 மி.மீ., திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை, வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இன்னும் ஒரு சில தினங்களுக்கு இதே நிலை நீடிக்கும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் மூடுபனி நிலவும் என்று தெரிவித்தனர்.

## சதீஷ்கட்டில் காற்றழுத்த தாழ்வுநிலை: தெலுங்கு மாநிலங்களில் மழைக்கு வாய்ப்பு

தெலுங்கு மொழி பேசும் மாநிலங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

சதீஷ்கட்டில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை ஒடிசா, ஜார்கண்ட்டை கடந்து ஆந்திர தெலுங்கானா மாநிலங்களுக்குள் நுழைந்துள்ளது.

அதனால் வியாழக்கிழமை முதல் தெலுங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களின் பல மாவட்டங்களில் ஒரு செ.மீ முதல் 3 செ.மீ அளவு மழை பதிவானது. இது வெள்ளி, சனிக்கிழமைகளிலும் நீடிக்கும் பெரும்பாலும் ஆந்திரா, தெலுங்கானாவின் பல பகுதிகள் மேகம் மூட்டத்துடன் காணபடும் என வானிலை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஆசிய நதிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்கும்: ஸ்வீடன் பல்கலை. ஆய்வில் தகவல்

வருங்காலத்தில் ஆசிய நதிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்கும் என ஸ்வீடன் கோத்தென்பெர்க் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து அந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டீலியாங் ஷென் கூறியதாவது: சீனா, இந்தியா, நேபாளம் மற்றும் இதர தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி, நதி நீர் பயன்பாடு மற்றும் பருவ நிலை மாற்றம் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் ஆசிய நதிகளில் தண்ணீர் வரத்து பெருமளவு குறையும் என்று பருவநிலை மாற்ற ஆய்வு வல்லுநர்கள் கவலை தெரிவித்துவந்தனர். இந்தநிலையில் பருவநிலை மாற்றத்தால் இமயமலையில் உள்ள பனிப்பாறைகள் உருகுவதால் எதிர் வரும் காலங்களில் யாங்ட்ஸி, மீகாங்க், சல்வீன், பிரம்மபுத்திரா மற்றும் சிந்து நதிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இது, 1971-2000 ஆண்டுகளில் காணப்பட்ட தண்ணீர் வரத்தை விட அதிகமாக இருக்கும். இதையடுத்து, நதிகளை ஒட்டியுள்ள நாடுகள் பொருளாதார ரீதியில் அதிகமாகப் பயன் பெறும் என்று ஷென் தெரிவித்தார். இந்த ஆய்வுக் கட்டுரை "குளோபல் அண்டு பிளானட்டரி சேஞ்ச்' என்ற இதழில்வெளியாகிஉள்ளது.

**இரண்டாம் போக சாகுபடிக்கு உளுந்து, பாசி பயிரிட்டால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம்: வேளாண் இணை இயக்குநர் தகவல்**

விருதுநகர் மாவட்டத்தில் இரண்டாம் போக சாகுபடிக்கு உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர்களை தனிப் பயிர்களாகவும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்தால் கூடுதல் வருமானம் பெறலாம் என வேளாண் இணை இயக்குநர் சி.கனகராசன் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: வடகிழக்குப் பருவ மழையால் விருதுநகர் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கண்மாய்கள் மற்றும் கிணறுகளில் இரண்டாம் போக சாகுபடிக்கு தேவையான தண்ணீர் உள்ளது.

எனவே நெல், சிறு தானியங்கள், பயறு வகை பயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

மேலும், குறைந்த வயது மற்றும் குறைந்த நீர்த் தேவையுடைய பயிர்களான உளுந்து, பாசி மற்றும் தட்டைப் பயிர்களை தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்து குறைந்த நாள்களில் கூடுதல் வருமானம் பெறலாம்.

இரண்டாம் போக சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள்: உளுந்து பயிரில் விபிஎன் 3, விபிஎன் 4, விபிஎன் 5, பாசிப் பயிரில் விபிஎன் 2, விபிஎன் 3, கோ-7, தட்டைப் பயிரில் விபிஎன் 2, போ-7 ரகங்களை பயிர் செய்யலாம். விதை நேர்த்தி செய்ய, பயறு வகை பயிர்களில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திரம் (அல்லது) கார்பண்டாசீம் (அல்லது) குடோமோனாஸ் 10 கிராம் (அல்லது)

டிரைக்கோடெர்மாவிரிடி 4 கிராம் கொண்ட விதை நேர்த்தி செய்து, 24 மணி நேரம் கழித்து விதைத்தல் வேண்டும்.

உயிரியல் விதை நேர்த்தியான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ரைசோபிசயம் சி.ஆர்.யு-7, 3 பாக்கெட் (600 கிராம்எக்) மற்றும் தாவர வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியாக்கள் 3 பாக்கெட் (600 கிராம்எக்) மற்றும் பாஸ்போபாக்டீரியா 3 பாக்கெட் (600 கிராம்எக்) கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதை நேர்த்தி செய்யாவிட்டால், 10 பாக்கெட் ரைசோபியம் (2000 கிராம்எக்), 10 பாக்கெட் தாவர வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியாக்கள்(2000 கிராம்எக்) மற்றும் 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா (2000 கிராம்எக்) உடன் 25 கிலோ தொழு உரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன்னால் இட வேண்டும்.

அவ்வாறு செய்தால், குறைந்த நாள்களில் உரிய ரகங்களை தேர்வு செய்து, தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கூடுதல் வருமானத்தை விவசாயிகள் ஈட்டலாம் என்றார் அவர்.

## ராமநாதபுரத்தில் ஜன.29இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜன.29 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளலாம். அதில் விவசாயம் சார்ந்த கோரிக்கைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என ஆட்சியர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 27-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருப்பூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜனவரி 27-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரகம் வெளியிட்ட அறிக்கை:

திருப்பூர்-பல்லடம் சாலையில் உள்ள புதிய மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில், ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஜனவரி 27-ஆம் தேதி நடைபெறவுள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இக்கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெருந்துறையில் ரூ.93 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ. 93 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப் பகுதி விவசாயிகள், 3,303 மூட்டைகளில் 1,60,000 கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.57.25-க்கும், அதிகபட்சமாக ரூ.60.50- க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.34.20-க்கும், அதிகபட்சமாக ரூ.56.85-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 93 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது என்று சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம்

நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் குன்னூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில், வேளாண்மை அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் சுகுணா கலந்து கொண்டு விவசாயிகளுக்கு சிறப்பு தேயிலை உற்பத்தி முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தோட்டக்கலை அலுவலர் சர்மிளா விளக்கினார்.

இந்த முகாமில், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஷீலா, பரமசிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விவசாயத் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர். உபதலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் இந்த முகாமில் கலந்து கொண்டனர்.

## ஜன.25-ல் ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்த இலவச பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 25ஆம் தேதி காலை 9 மணிக்கு நெல், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் மரவள்ளி பயிர்களுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: இப்பயிற்சி முகாமில் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்கள் சாகுபடிக்கு மண்வளத்தினை கண்டறியும் வழிமுறைகள், மண்வளத்தை

மேம்படுத்தும் உத்திகள், மண் வளத்திற்கேற்ற சமச்சீர் உரமிடுதல் பற்றிய தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286 266345, 266244 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 24ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும்.

## இயற்கை வள பாதுகாப்பு மாநாடு

குமரி அறிவியல் பேரவை இளம் விஞ்ஞானிகள் பங்கேற்ற இயற்கை வள பாதுகாப்பு மாநாடு புதுக்கோட்டையில் நடைபெற்றது.

குமரி அறிவியல் பேரவை சார்பில் தேர்வு செய்யப்பட்ட இளம் விஞ்ஞானிகளின் திறன் மேம்பாட்டுக்காக பல்வேறு துறைகள் மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக இந்திய மருத்துவ சங்கம் (புதுக்கோட்டை) சார்பில் இயற்கை வளம் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு. வேலையன் தலைமை வகித்தார். இந்திய மருத்துவ சங்கத்தின் புதுக்கோட்டை மேலாளர் வீரமுத்து, மருத்துவர்கள் பிரபாகர், ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இளம் விஞ்ஞானி விஷ்ணுசங்கர் மேற்கு தொடர்ச்சி மலை பாதுகாப்பு குறித்தும், நயனா நாயர் குமரி மாவட்ட இயற்கை வளம் மற்றும் அதன் இன்றைய நிலை குறித்தும் பேசினர். சித்தார்த், காவிரி ஆற்றின் இன்றைய நிலையை விளக்கினார். ஆசிம் முகமது "இந்திய விவசாயம் அன்றும்- இன்றும்' என்ற தலைப்பிலும், டெரிஷியா "தாமிரவருணி

ஆற்றுப் படுகையும்- அல்லலும்' என்ற தலைப்பிலும் பேசினர். மருத்துவர் அன்பு வரவேற்றார். மருத்துவர் தனசேகரன் நன்றி கூறினார்.

## 28இல் மீனவர்கள் குறைதீர் கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட மீனவர்கள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (ஜன.28) நடைபெறுகிறது.

இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்துக்குள்பட்ட ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் ஜன.28ஆம் தேதி காலை 10 மணிக்கு இக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் தலைமை வகிக்கிறார்.

இக் கூட்டத்தில், பங்கேற்கும் மீனவர்கள் தங்களது குறைகள் குறித்த மனுக்களை அந்தந்த துறை வாரியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் ஒவ்வொரு கோரிக்கைகளுக்கு தனித் தனியே மனுவாக வழங்க வேண்டும். இக் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த மாதம் நடைபெறும் கூட்டத்தில் பதில் தெரிவிக்கப்படும். மேலும், அவரவர் முகவரிகளுக்கும் பதில் குறித்த விவரங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றார் ஆட்சியர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இலவச வெள்ளாடு திட்டபயனாளிகள் 25,487 பேர்

திண்டுக்கல்;திண்டுக்கல்லில் இலவச வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் மூலம் 25,487 பேர் பயனடைந்துள்ளனர்' என, கால்நடை

பராமரிப்புத்துறை இணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது: கிராமப்புற பெண்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்காக கால்நடை பராமரிப்பு துறை மூலம் இலவச வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள், கறவை பசுக்கள், நாட்டுக் கோழி பண்ணை திட்டம், கால்நடை காப்பீட்டுத் திட்டம் உள்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. திண்டுக்கல்லில் நான்கரை ஆண்டுகளில் ரூ.32.95 கோடி மதிப்பீட்டில் 247 கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் 25,487 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடை காப்பீடு திட்டம், மாநில தீவன அபிவிருத்தி திட்டம், தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் மானியங்களும் வழங்கப்பட்டுள்ளது, என்றார். உதவி இயக்குனர் அப்துல்காதர், மருத்துவர்கள் முத்துசாமிபாண்டியன், தங்கவேல் உடனிருந்தனர்.

## சுற்றுலாபயணிகள் ரசிக்கும் "ஆர்னமென்டல்' செர்ரி பூக்கள்

கொடைக்கானல்: கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் உள்ள ஆர்னமென்டல் செர்ரி பூக்களை சுற்றுலா பயணிகள் வெகுவாக ரசிக்கின்றனர். பிரையன்ட் பூங்காவில் "ஆர்னமென்டல் செர்ரி' என்ற மரங்களில் தற்போது ரோஸ் வண்ணத்தில் பூக்கள் பூத்து குலுங்குகின்றன. அவற்றை பூங்காவிற்கு வரும் சுற்றுலாபயணிகள் ரசிக்கின்றனர். இம்மரத்தில் டிசம்பரில் இலைகள் தோன்றி, உதிர்ந்து ஜனவரியில் பூக்களாய் பூக்கும் தன்மை வாய்ந்தது. பூக்கள் உதிர்ந்து மறுபடியும் இலைகள் தோன்றும். இலைகள் உதிரும் போது பூக்களாய் மலரும். இம் மரத்தினை காணும் சுற்றுலா பயணிகள் மயங்கி, ரசித்து ஆர்வத்தோடு அதனருகே நின்று குடும்பத்தினருடன் புகைப்படங்கள் எடுத்து செல்கின்றனர்.

## செஞ்சியில் துவரை சாகுபடி.. விவசாயிகள் திடீர் ஆர்வம்

செஞ்சி: துவரம் பருப்பு விலை உயர்வினால், செஞ்சி பகுதி விவசாயிகள் மீண்டும் துவரை சாகுபடியில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

தமிழகத்தில் சமயலுக்கு அதிகம் பயன்படுத்தும் துவரை அண்டை மாநிலமான ஆந்திராவிலேயே அதிகளவில் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தனியாக பயிரிடுகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் காடு, மலைகள் நிறைந்த செஞ்சி பகுதியின் மண் வளம் பல்வேறு பயிர்களை விளைவிப்பதற்கு ஏற்ற மண்ணாக உள்ளது. இங்கு நெல், வேர்கடலை, கரும்பு ஆகிய பயிர்களை பிரதானமாக சாகுபடி செய்கின்றனர்.

இத்துடன் சோளம், கம்பு, கேழ்வரகு, உளுந்து, எள், தட்டை பயிர் உள்ளிட்ட தானிய வகைகளையும், கத்தரி, வெண்டை, மிலகாய், பீர்க்கன், பாகர்காய் உள்ளிட்ட காய்கறிகளையும், சில இடங்களில் பூக்களும் பயிர் செய்கின்றனர்.

கடந்த காலங்களில் வேர்கடலை பயிருடன் ஊடு பயிராக துவரை சாகுபடி செய்து வந்தனர். இதை அறுவடை செய்து, பதப்படுத்தி பிரிப்பதில் உள்ள வேலைப்பளு காரணமாக துவரை சாகுபடி செய்வதை வெகுவாக குறைத்து விட்டனர்.

கடந்த ஆண்டு துவரையின் விலை கிலோ 200 ரூபாயை தாண்டியது. இதனால் இந்தாண்டு மீண்டும் துவரை சாகுபடி செய்வதில், செஞ்சி பகுதி விவசாயிகளின் ஆர்வம் அதிகரித்துள்ளது. பல இடங்களில் வேர்கடலையுடன் ஊடு பயிராக துவரை சாகுபடி செய்துள்ளனர். சில இடங்களில் சிறு அளவில் தனியாகவும் துவரை சாகுபடி செய்துள்ளனர். இதன் மூலம் தங்களின் தேவைக்கு துவரையை சாகுபடி

செய்திருப்பதுடன், எஞ்சிய வற்றை சிறிய அளவில் விற்பனையும் செய்கின்றனர்.

நெல், கரும்பு, வேர்கடலையுடன் தோட்ட கலை பயிர்களை பயிர் செய்யும் படி, பிரசாரம் செய்யும் அரசு வேளாண்மை துறையினர், விவசாயிகள் துவரை சாகுபடி செய்வதற்கு மான்ய விலையில் துவரை விதைகளை கொடுத்து, ஊக்கப்படுத்த வேண்டும்.

## கறவைமாடுகளின் எண்ணிக்கை: ஒரே ஆண்டில் 4,000 அதிகரிப்பு

தேனி;' மாவட்டத்தில் தீவனப்பயிர்கள் உற்பத்தி அதிகரிப்பால் கறவை மாடுகளின் எண்ணிக்கை ஒரே ஆண்டில் 4,000 அதிகரித்துள்ளது.ஆண்டிபட்டி, தேனி, காமாட்சிபுரம், தாடிச்சேரி, தப்புக்குண்டு, சின்னமனூர், பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்கள் அதிகமாக உள்ளன. இங்கு பெரும்பாலான விவசாயிகள் கறவை மாடுகள் வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு வீட்டில் கறவை மாடுகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை நம்பி ஏராளமானோர் பல ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்க முன் வருகின்றனர். இதற்கிடையில் மாவட்டத்தில் உழவர் பயிற்சி மையம் சார்பில் விவசாயிகளுக்கு நவீன அறிவியல் முறையில் கறவை மாடுகள் வளர்ப்பது குறித்து பயிற்சி அளித்து வருகிறது.

இதன் காரணமாக 2014ல் 88,000 ஆக இருந்த கறவை மாடுகளின் எண்ணிக்கை 2015ல் 92,000 மாக அதிகரித்துள்ளது. ஒரே ஆண்டில் 4, 000 கறவை மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தேனி உழவர் பயிற்சி மைய தலைவர் செந்தில்குமார் கூறியதாவது: விவசாயிகளுக்கு கறவை மாடுகளின் இனங்கள், கொட்டகை அமைத்தல், தீவன பயிர்கள் உற்பத்தி, கலப்புத் தீவனம் தயாரித்தல், அசோலா

உற்பத்தி, தீவனப் பராமரிப்பு, இனவிருத்தி பராமரிப்பு, சினை மாடுகள் பராமரிப்பு உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தீவீன பரப்பு, மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விவசாயிகள் தலா 10 மாடுகள் வீதம் அதிகப்படியாக 80 கறவை மாடுகள் வரை வளர்க்கின்றனர். கறவை மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதந்தோறும் ரூ.50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை சம்பாதிக்கின்றனர், என்றார்.

## விவசாயிகள் தயாரிக்கும் சத்துமாவு தட்டுப்பாடு

நாமகிரிப்பேட்டை: முள்ளக்குறிச்சி அருகே, விவசாயிகள் தயாரித்து விற்கும் சத்துமாவு கிடைப்பதில் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் கார்கூடல்பட்டி ஊராட்சியை சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து காமதேனு உழவர் கூட்டமைப்பை ஏற்படுத்தினர். இவர்கள், மெட்டாலாவில் காய்கறி மண்டி, முள்ளுக்குறிச்சியில் உரம், மருந்து கடை, இரும்பு கடை, விதை விற்பனை ஆகியவற்றை செய்து வருகின்றனர். மேலும், இப்பகுதியில் விளையும் சிறுதானியங்கள், பயிறு வகைகளை வாங்கி, தூய்மைப்படுத்தி, அரைத்து, தேன்அமுதம் என்ற பெயரில் சத்துமாவு தயாரித்து வருகின்றனர். உள்ளூர் மட்டுமின்றி நாமக்கல், கரூர், சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கும் அனுப்பி வந்தனர். இதன் சுவை, மணம் ஆகியவற்றால் இது மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில், கேழ்வரகு, கம்பு, சாமை உள்ளிட்ட சிறுதானியங்கள் மற்றும் நரிப்பயிறு, பாசிப்பயிறு உள்ளிட்ட பயிறு வகைகளின் சீசன் முடிவுக்கு வந்துள்ளதால், சத்து மாவு தயாரிப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் தேவை இருந்தும் அதற்கு ஏற்றார்போல் விவசாயிகளால் சத்துமாவை சப்ளை செய்ய முடியவில்லை.

இதுகுறித்து, காமதேனு உழவர் கூட்டமைப்பை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: சிறுதானியங்கள் அறுவடை தை, மாசியில் தான் நடக்கும். நாங்கள் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்வதால், தானியங்களை வாங்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, எங்களால் தேவைக்கு ஏற்றார் போல் மாவு தயாரித்து கொடுக்க முடியவில்லை. சில இடங்களில் தட்டுப்பாடு நிலவுகிறது. விரைவில் அதை சரி செய்து விடுவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உணவு பொருட்கள் வர்த்தகம் ரூ.60 லட்சம் கோடியை எட்டும்




மும்பை: உணவு பொருட்கள் சந்தை வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. இதில் சுமார் ரூ.25 லட்சம் கோடிக்கு வர்த்தகம் நடக்கிறது. இன்னும் 4

அல்லது 5 ஆண்டுகளில் இந்த துறையின் வளர்ச்சி அபாரமாக இருக்கும். இந்த துறை வர்த்தகம் வரும் 2017ல் 35.6 லட்சம் கோடியாக இருக்கும். 2020ம் ஆண்டில் ரூ.61 லட்சம் கோடியை தாண்டும் என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க துறை அமைச்சர் வி.கே.சிங் தெரிவித்தார். குறிப்பாக இத்துறையில் உலர் பழங்கள், தானியங்கள், பருப்பு வகை, சர்க்கரை, உணவு எண்ணெய் பங்களிப்பு 34.7 சதவீதமாக உள்ளது. மேக் இன் இந்தியா திட்டத்தில் உணவு பதப்படுத்தல் நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வரவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

## இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்தும் வழிமுறை

சேதுபாவாசத்திரம், : நடப்பு சம்பா நெற்பயிரில் பரவலாக தென்படும் இலைசுருட்டு புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் உள்ள ஊமத்தநாடு, ரெட்டவயல், பெருமகளூர், முதுகாடு, கொளக்குடி, மணக்காடு போன்ற பல்வேறு பகுதிகளில் நடப்பு ஏரி பாசன சம்பா சாகுபடி செய்துள்ள பயிர்களில் இலைசுருட்டு புழுவின் தாக்குதல் தற்போதுள்ள தட்பவெப்ப நிலை மாற்றத்தால் பரவலாக தென்படுகிறது. இந்த பூச்சியின் தாக்குதலால் பயிர்களில் உள்ள பச்சையத்தை சுரண்டி தின்று உயிர் வாழ்வதால் பயிர்களின் வளர்ச்சி குன்றி அதிக மகசூல் கிடைக்க கேடு விளைவிக்கும். எனவே சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தளைச்சத்து கொடுக்கக்கூடிய யூரியா உரத்தை அதிகம் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும். மேலும் தாய் அந்து பூச்சி முட்டையிடுவதை தடுப்பதற்கு இரவு நேரங்களில் விளக்கு பொரி வைத்து அந்த பூச்சியை அழித்து தடுக்கலாம். அல்லது முட்டை ஒட்டுண்ணி ட்ரைக்கோ டிரைம்மா கைலோனிஸ் ஏக்கருக்கு 40 ஆயிரம் என்ற விகிதத்தில் நட்ட 15ம் நாள் முதல் 5 அல்லது 6 முறை இட்டு

கட்டுப்படுத்தலாம். 10 சதவீதத்துக்குமேல் பயிர்களில் தாக்குதல் தென்பட்டால் புரபனோபாஸ் என்ற மருந்தை ஏக்கருக்கு 400 மில்லியை 200 மீட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது இண்டோஷாகார்ப் 14.5 எஸ்.சி என்ற வேப்பெண்ணெய் 0.5 சதத்தை ஏக்கருக்கு ஒரு லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

## கொழுப்பு சத்தை குறைக்கும் வெண்பூசணி




வெண்பூசணி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. இதற்கு சாம்பல் பூசணி, கல்யாண பூசணி என்ற பெயர்கள் உள்ளன. இது, பொங்கல் காலகட்டத்தில் அதிக அளவில் விளையும். நுண்கிருமிகளை தடுக்க கூடிய தன்மை கொண்ட வெண் பூசணியின் பூ, காய், இலை, விதை ஆகியவற்றில் மருத்துவ குணங்கள் உள்ளன. வெண்பூசணியை பயன்படுத்தி இதயத்தை பலப்படுத்தும், ரத்தத்தை சுத்தப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்.

வெண் பூசணியின் தோலை நீக்கி துண்டுகளாக்கி 50 கிராம்

எடுத்துக்கொள்ளவும். இதனுடன், ஒரு ஸ்பூன் சீரகம் சேர்க்கவும். ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி சிறிது தேன் சேர்த்து குடித்தால், இதயகோளாறு இல்லாமல் போகிறது. ரத்த ஓட்டம் சீராகிறது. இதயம் ஆரோக்கியம் அடைகிறது. கல்லீரல் பலமடைகிறது. வெண் பூசணியில், ஊட்டசத்து அதிகம் உள்ளது. வைட்டமின் சி, கால்சியம், நீர்ச்சத்து மிகுதியாக உள்ளது.

வெண் பூசணியை பயன்படுத்தி அதிகளவிலான ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதலுக்கான மருந்து தயாரிக்கலாம். 100 மில்லி அளவு வெள்ளை பூசணி சாறு, சம அளவு மோர் சேர்த்து கலந்து குடிக்கவும். இது வெள்ளப்படுதலுக்கு மருந்தாகிறது. மாதவிலக்கு சமயத்தில் அதிகளவு ரத்தப்போக்கை கட்டுப்படுத்தும். அல்சர் உள்ளவர்கள் இதை எடுத்துக்கொண்டால் அல்சர் சரியாகும். ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை வெள்ளை பூசணிக்கு உள்ளது. ரத்த மூலத்துக்கு மருந்தாகிறது.

உடல் தேற்றியாக பயன்படுகிறது. சத்தூட்ட பொருளாக விளங்குகிறது. வெள்ளை பூசணியின் விதைகளை பயன்படுத்தி சிறுநீர் பாதையில் ஏற்படும் எரிச்சலை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம்.வெண் பூசணி விதைகள் 20 வரை எடுத்து லேசாக நசுக்கி எடுக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர வயிற்றில் உள்ள பூச்சிகள் வெளியேறும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல் தணியும். நீர்சத்து மிகுந்த வெண் பூசணியின் விதைகள் வயிற்றில் இருக்கும் கிருமிகளை வெளியேற்றும். சிறுநீரை எளிதாக வெளித்தள்ளும் தன்மை கொண்டது.

இலையை பயன்படுத்தி தோலில் ஏற்படும் தொற்றுகளுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்காலாம். 50 மில்லி தேங்காய் எண்ணெய்யுடன் சிறிது

எலுமிச்சை சாறு சேர்க்கவும். இதனுடன் வெண் பூசணி இலை, பூவை நீர்விடாமல் அரைத்து சேர்க்கவும். தைலப்பத்தில் காய்ச்சி வடிகட்டி எடுத்து வைக்கவும். இதை தோலில் அரிப்பு ஏற்படும் இடத்தில் பூசினால் அரிப்பு, தடிப்பு சரியாகும். பூஞ்சை காளான்களை போக்கும். படை, சொரியாசிஸ் ஆகியவற்று இந்த பூச்சு மருந்தாகிறது.

வெண்பூசணியை கொண்டு சாம்பார், மோர் குழம்பு வைக்கும்போது உணவுக்கு தனி சுவை கிடைக்கிறது. உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கும் வெண் பூசணி கொழுப்பு சத்தை கரைக்க கூடியது. உடல் எடையை குறைக்கும். வெண் பூசணி லேகியத்தை சாப்பிட்டுவர மெலிந்த உடல் பலம் பெறும். சதைப்பற்று ஏற்படும். சாற்றை வெறும் வயிற்றில் சாப்பிடும்போது உடல் எடை குறையும்.

**காய்ச்சலை போக்கும் செப்பு நெருஞ்சில்**




செப்பு நெருஞ்சில் புல் தரையில் வளரக்கூடியது. தரையோடு தரையாக படர்ந்துள்ள கொடி வகை. செப்பு நெருஞ்சில் இருமல், காய்ச்சலை போக்கும் தன்மை கொண்டது. இதன் பூக்கள் ரோஜா வண்ணத்தில் அமைந்திருக்கும். செடிப்பகுதி படர்ந்து காணப்படும். நெருஞ்சில்

இனத்தை சார்ந்தது. இலைப் பகுதி காய்ச்சலை தணிக்கும் மருந்தாகிறது. வேரானது புழு கொல்லியாகிறது. முழுச்செடியும் பயனுள்ளதாகிறது. சிறுநீரக கற்கள், பித்தப்பதை கற்களை வெளித்தள்ளும் தன்மை கொண்டது.

சிறுநீரை பெருக்க கூடியது. பால்வினை நோய்க்கு மருந்தாகிறது. வெள்ளைப்போக்கை இல்லாமல் செய்கிறது. செப்பு நெருஞ்சில் செடியை பயன்படுத்தி காய்ச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். செப்பு நெருஞ்சிலின் இலை, கொடி என அனைத்தையும் எடுத்துக் கொள்ளலாம். இதனுடன், அரை ஸ்பூன் அளவுக்கு பனங்கற்கண்டு சேர்த்து, ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிக்கட்டி 50 முதல் 100 மில்லி வரை காலை, மாலை வேளையில் குடிப்பதால் காய்ச்சல் தணியும். வியர்வைபெருகும்.

உடல் உஷ்ணத்தை போக்கும்.பித்தப்பை கற்கள், சிறுநீரக கற்களை கரைக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: செப்பு நெருஞ்சில் செடி, வெட்டி வேர், பனங்கற்கண்டு. வெட்டி வேரை சிறு துண்டுகளாக்கி ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுத்துக் கொள்ளவும். இதனுடன், செப்பு நெருஞ்சில் செடி, அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்க்கவும். நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்தால், சிறுநீரக கற்கள் கரையும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல் சரியாகும்.

புல்வெளி, விளையாட்டு மைதானத்தில் படர்ந்திருக்கும் இதில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. அல்சரை சரிப்படுத்த கூடியது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. புத்துணர்வை தரக்கூடியது. நோய் நீக்கியாக பயன்படுகிறது. வேரை பயன்படுத்தி வயிற்று பூச்சி, புழுவை வெளியேற்றும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: செப்பு

நெருஞ்சில் வேர், கருஞ்சீரகம், தேன். 10 கிராம் வேருடன் சிறிது கருஞ்சீரகம்சேர்க்கவும்.

ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்கவைக்க வேண்டும். வடிக்கட்டி ஒரு ஸ்பூன் அளவுக்கு தேன் சேர்த்து குடிக்கவும். 50 முதல் 100 மில்லி வரை வாரம் ஒருமுறை என 3 வாரம் எடுத்துக் கொள்ளலாம். இதனால் வயிற்றில் இருக்கும் நாடா, கொக்கி, கீரி புளுக்கள் வெளியேறும். மலம் இளக்கியாகவும் பயன்படுகிறது. பல்வேறு நன்மைகளை கொண்ட செப்பு நெருஞ்சில், சிறுநீரக பாதையில் இருக்கும் தொற்றுக்களை போக்கும்.

சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. செப்பு நெருஞ்சில் செடியை நிலத்தில் இருந்து எடுக்கும்போது குடை வடிவில் இருக்கும். வேர் பகுதி நீண்டிருக்கும். இலைகள் கீழா நெல்லி இலைகள் போன்று இருக்கும். இலை சிறியதாகவும் அடர்த்தியாகவும் காணப்படும். ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அதிகம் கிடைக்கும். இதை சேகரித்து காயவைத்து பயன்படுத்தலாம். செப்பு நெருஞ்சில் பொடி நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்.

**பெருநோய் தடிப்பு நீக்கும் ஆடுதீண்டாப்பாளை**



ஞான மிலார் வேடம் பூண்டும் நரகத்தார்
ஞாமுள் ளோர் வேடம், இன்றெனில் நன்முத்தர்
ஞான முளதாக வேண்டுவார்- நக்கன் போல்
ஞான முளவேடம் நண்ணிநிற்பாரே

பெயரை கேட்டதும் ஆடு இந்த செடியை உணவுக்காக கடிக்காது என்பதும் அதனாலயே இந்த பெயர் ஏற்பட்டதும் விளங்கும். தரையில் படர்ந்து வளரும் செடியின் இலைகளின் மேல் வெள்ளை பூச்சுடன் காணப்படும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் விளையக்கூடியது. ஆடுதீண்டாப்பாளை, ஆடுதொடப்பாளை பங்கம்பாளை என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும்.

ஆடுதீண்டாப்பாளையை முறையாக பயன்படுத்தினால் குடற்புழு, சிலந்தி பூச்சிகடிகளின் நஞ்சுகள், கரும்படை, கரப்பான் 80 வகை வாதநோய்கள் குணமாகும். சில பெண்களுக்கு பத்து மாதம் ஆகியும் குழந்தை பிறப்பின் வலி எடுக்காமல் கடும் வேதனையுடன் முறையற்ற வலி உண்டாகும். வேதனையில் துடிக்கும் நிலை உண்டாகும். அவர்களுக்கு இதன் வேரை சூரணமாக்கி அதில் பத்து கிராம் அளவில் வெந்நீரில் கொடுக்க வேதனை தீரும் வகையில் குழந்தை பிறப்பு உண்டாகும்.

எந்த பாம்பு கடித்தது என்று தெரியாமல் பாம்பு கடி ஏற்பட்டால் இதன் வேரை அரைத்து காலை வெறும் வயிற்றில் ஐந்து நாட்கள் தொடர்ந்து கொடுத்தால் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் எல்லாவிதமான பாம்பு கடிகளும் நீங்கும். மருந்து சாப்பிடும் காலத்தில் 24மணிநேரம் தூங்காமல் இருந்து புதுப்பாளையில் உப்பில்லாத பச்சரிசியை பொங்கி சாப்பிட வேண்டும். பெண்கள் வயிற்றில் உள்ள கருப்பை கோளாறு காரணமாக குழந்தை பிறப்பில் பாதிப்பு ஏற்படும்.

பெண்கள் ஆடுதீண்டாப்பாளையின் விதைகளை சூரணம் செய்து ஐந்து கிராம் எடுத்து கையளவு சிற்றாமணக்கெண்ணெயில் கொடுக்க பேதியாகும். மாதம் ஒரு முறை என மூன்று மாதம் கொடுக்க அதன் பிறகு கரு ஏற்படும். பெண்களின் வயது உடல் தன்மை அறிந்து கொடுக்க வேண்டும். பெண்களுக்கு ஏற்படும் முக்கியமான பிரச்சனை முறையற்ற மாதவிடாய். இதனால் மனஉளைச்சலும் சில பெண்களுக்கு ஏற்படும்.

இவர்கள் ஆடுதீண்டாப்பாளையின் இலைச்சாற்றை காலை மாலை பத்து மிலி அளவில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நாளடைவில் மாதவிடாய் ஒழுங்காகும். விதைச்சூரணம் ஐந்து கிராம் விளக்கெண்ணெயில் சாப்பிட மலத்தில் கலந்துள்ள கிருமிகள் பேதியாகி நீங்கும். முறைக்காய்ச்சல் தணியும். ஆடுதீண்டாப்பாளையின் முழுச்செடியின் சாற்றில் அதே அளவு நல்லெண்ணெய் கலந்து பக்குவமாய் காய்ச்சி எடுத்து வடிகட்டி கொள்ளவேண்டும்.

அதை உடலில் ஏற்படும் கரும்படையில் பூச அவை நீங்கி குணம் ஏற்படும். பாம்பு கடித்து விட்டால் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் கொடுக்க விஷம் நீங்கும். இந்த சூரணத்தை கொடுத்து வந்தால் யானை தோல் சொறி என்ற தோல் நோய் நீங்கும். சிலருக்கு முகம் கை கால்களில் கருமை படர்ந்து இருக்கும். இதை கருங்குட்டம் என்பார்கள் இவர்கள் காலை வேளையில் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் வெந்நீரில் கலந்து குடிக்க கருங்குட்டம் குணமாகும்.

கிரந்திகரப் பன் வெக்கை கேசருவி மாந்தை
யரந்தை விளையை யறுக்கும் துறந்து
பிரியொணா நோய்களையும் பின்முன்பா ராமல்
மறியுணா மூலியடை வாய்
ஆடுதொடப்பாளைக் சுகக்கிருமி வன் சிலந்தி
நீடுகளுங் குட்டம் நிறை கரைப்பான் ஆடிடச்செய்

என்பது வாய்வும் இகல்குட்ட முந்தீரும்
திண்பெறுதற் றாது வுமாரு செய்ய

என்கிறார் அகத்தியர் பெருமான். ஆடே தீண்டாத செடி என்றாலும் அதை ஆராய்ந்து அதன் தனித்தன்மையும் அறிந்து நாம் நலமாக வாழ்வதற்கு வகுத்த முறைகளை பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி நலமுடன் வாழ்வோம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பாலமேடு பகுதியில் பூப்பூக்க தொடங்கிய மாமரங்கள்**



அலங்காநல்லூர்,

பாலமேடு பகுதியில் உள்ள மாமரங்களில் பூப்பூக்க தொடங்கிஉள்ளது.

மாமரங்கள்

மதுரை அருகே உள்ள பாலமேடு மற்றும் சுற்று வட்டார பகுதியில் அதிக அளவில் மாந்தோப்புகள் உள்ளன. இங்கு கல்லாமை, காசா, இமாம்பசந்து, பாலாமணி, சப்பட்டை உள்பட பல்வேறு மா ஒட்டு ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் ஜனவரியில் பூப்பூத்து ஏப்ரல் மாதம் அறுவடை தொடங்குவது வழக்கம். அதன்படி சரந்தாங்கி, வெள்ளையம்பட்டி, முடுவார்பட்டி, சேந்தமங்கலம், வலையபட்டி, சாத்தியார் அணை, இடையபட்டி உள்பட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள மாமரங்களில் பூக்கள் பூக்கத் தொடங்கி உள்ளன.

இதுகுறித்து மா விவசாயியும், ஊராட்சிமன்ற தலைவருமான சரந்தாங்கி முத்தையன் கூறியதாவது:- இந்த வருடம் போதுமான பருவமழை பெய்யாமல் குறைந்து போனதால் வறண்ட நிலை நீடிக்கிறது. இருப்பினும் அந்தந்த பகுதி மா விவசாயிகளின் பயன்பாட்டிற்கு ஏற்றார்போல் ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர் பாய்ச்சி மரங்களை பாதுகாத்து வருகின்றனர். மானாவாரியாக பயிரிடப்பட்டிருந்த மாமரங்கள் நீர் சத்தின்றி காணப்படுவதால் பூப்பூப்பதில் காலதாமதமாகிறது. மேலும் இந்த வருடம் மருந்து தெளிப்பது, நிலத்தை உழுது சீரமைப்பது உள்ளிட்ட பல்வேறு பராமரிப்பு செலவுகள் அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் விவசாயிகள் எதிர்பார்க்கும் மகசூல் கிடைப்பது இன்னும் சில மாதங்கள் கழித்துதான் தெரியவரும். இவ்வாறு அவர் கூறினார்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 6,500 மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம்




நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம்நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.1½கோடிக்குவிற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 847 முதல் ரூ.5 ஆயிரத்து 399 வரையிலும், டி.சி.எச் ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 850 முதல் ரூ.6 ஆயிரத்து 606 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 907 முதல் ரூ.5 ஆயிரத்து 352 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். சென்ற வாரத்தை விட இந்த வாரம் பருத்தி மூட்டைகள் வரத்தும் அதிகரித்ததோடு, ஏலமும் கூடுதல் தொகைக்கு போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## முட்டை விலை அதிகரிக்க வாய்ப்பு ஒருங்கிணைப்புக்குழு தகவல்



தமிழகத்தில் தைப்பூசம் முடிவடைந்த பிறகு முட்டை விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு சார்பில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.

முட்டைவிலைநீடிப்பு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 402 காசுகளாக நீடித்து வருகிறது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை இன்னும் ஒரு வார காலத்திற்கு மாற்றம் செய்வது இல்லை என முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 402 காசுகளாக நீடிக்கிறது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-420, ஐதராபாத்-375, விஜயவாடா,

தனுகு-372, பார்வாலா-386, மும்பை-415, மைசூரு-410, பெங்களூரு-395, கொல்கத்தா-412,டெல்லி-393.

கறிக்கோழி விலை சரிவு கறிக்கோழி கிலோ ரூ.72-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.68 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.60-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

முட்டை கொள்முதல் விலை ஒரு வார காலத்திற்கு 402 காசுகளாக நீட்டிப்பு செய்யப்பட்டு இருப்பது குறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் நாமக்கல் மண்டல தலைவர் டாக்டர் செல்வராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- கடும் பனிப்பொழிவு காரணமாக வட இந்தியாவின் பல மாநிலங்களில் மிக பெரிய அளவில் குளிரின் தாக்கம் இருந்து வருகிறது. இதன் காரணமாக முட்டையின் தேவை அதிகரித்து உள்ளது. 15 லட்சம் முட்டைகள் உற்பத்தி சரிவு

நாமக்கல் மண்டலத்தின் முக்கிய விற்பனை மையமான கேரள மாநிலத்தில் அய்யப்ப சீசன் முடிந்ததை தொடர்ந்து, அங்கு முட்டை விற்பனை அதிகரித்து உள்ளது. மேலும் வருகிற 24-ந் தேதி தைப்பூசம் முடிவடைய உள்ளதால், தமிழகத்திலும் முட்டைக்கான தேவை அதிகரித்து விலையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அத்துடன் தமிழகத்தில் காய்கறிகள் விலை உயர்வு காரணமாகவும் முட்டைக்கான தேவை அதிகரித்து வருகிறது.

மேலும் கடந்த ஒரு ஆண்டு காலமாக முட்டைக் கோழி பண்ணை தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளதால், பண்ணைகளில் குஞ்சு

விடுவது ஓரளவு குறைந்து உள்ளது. இதனால் முட்டை உற்பத்தி குறைந்து உள்ளதும், கடந்த ஜனவரி மாதத்தோடு ஒப்பிடுகையில் நாமக்கல் மண்டலத்தில் தினசரி 15 லட்சம் முட்டைகள் உற்பத்தி குறைந்துஉள்ளது.

குறைத்து விற்க வேண்டாம் இதுபோன்ற காரணங்களால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர வாய்ப்பு உள்ளது. இந்த சூழ்நிலையில் பண்ணையாளர்கள் ஏற்றுமதி சைஸ் முட்டைகளை பெரிய முட்டை விலையில் இருந்து 10 பைசா மட்டுமே குறைத்து விற்க வேண்டும். அதிக அளவு குறைத்து ஏற்றுமதி சைஸ் முட்டைகளை விற்பனை செய்ய தேவையில்லை. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் அரவைக்காக 2,000 டன் நெல் சிவகங்கை, திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டது



தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் அரவைக்காக 2,000 டன் நெல் சிவகங்கை, திருநெல்வேலிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுவருகிறது.

அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, சென்னை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

2,000டன்நெல்

தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டு பிள்ளையார்பட்டி, பருத்தியப்பர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு இருந்த நெல்மூட்டைகள், லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. இதே போல் கொள்முதல் நிலையங்களில் இருந்தும் லாரிகளில் நெல்மூட்டைகள் ஏற்றி

வரப்பட்டன. இவ்வாறு ஏற்றிவரப்பட்ட நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலில் 21 பெட்டிகளில் 1000 டன் சிவகங்கைக்கும், 21 பெட்டிகளில் 1000 டன் திருநெல்வேலிக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

**தேங்காய்ப்பாலை சத்துணவு திட்டத்தில் சேர்க்க வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம் கோரிக்கை**



தமிழக முதல்–அமைச்சருக்கு தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தின் சார்பில் மாநிலத்தலைவர் டி.வேலாயுதம் அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:–

தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேங்காய்களுக்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் நிர்ணயம் செய்யப்பட்டு, அதற்கான விலை பாதுகாப்பு இன்சூரன்ஸ் செய்து தர வேண்டும். உலகிலேயே அதிசயிக்கத்தக்க சத்துக்களை கொண்ட தேங்காய்ப்பாலை, சத்துணவுத்திட்டத்தில் சேர்த்து குழந்தைகள் மற்றும் மாணவச்செல்வங்களை அறிவுசார்ந்த வலிமை மிக்க எதிர்கால

குடிமக்களாக்க, ஆரோக்கியமான இளைஞர்களாக வளர ஊக்குவிக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் காங்கேயம், மூலனூர், வெள்ளகோவில் பகுதிகளில் கலப்படத்தின் ஊற்றுக்கண்களாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் சமூக விரோதிகளை இனம்கண்டு கடுமையான தண்டனை அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்ற சமையல் எண்ணெய்களை விட தேங்காய் எண்ணை, நோய் எதிர்ப்பு சத்துக்களை கொண்டது. சுத்தமான தேங்காய் எண்ணை நியாயவிலைக்கடைகளில் பொது வினியோகம் செய்யப்பட வேண்டும். தென்னையில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தென்னை விவசாயிகளுக்கு பிரசாரங்களை அரசே முன்னின்று நடத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மூலனூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் ரூ.8 லட்சத்திற்கு பருத்தி ஏலம்



திருப்பூர் மாவட்டம் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். நேற்று நடைபெற்ற ஏலத்தில் மூலனூர் மற்றும் வேளாம்பூண்டி, சின்னமருதூர், கிளாங்குண்டல், வடுகப்பட்டி, கன்னிவாடி, பொன்னிவாடி போன்ற பகுதிகளைச்சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் பயிர் செய்த பருத்தியை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்திருந்தனர். இந்த பருத்தியை வாங்குவதற்காக அன்னூர், திருப்பூர், மேட்டுப்பாளையம், புஞ்சைப் புளியம்பட்டி, பல்லடம், கோவை, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து வாங்கிச்செல்கிறார்கள்.

இந்த வார ஏலத்தில் ஆர்.சி.எச். முதல்ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 180–க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது. இந்த வாரம் மொத்தம் 410 பருத்தி மூடைகளே விற்பனைக்காக வந்திருந்தன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.8 லட்சம் ஆகும். இந்த தகவலை மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் ‘ஆண்டுதோறும் ஜனவரி மாதம் முதல் மூலனூர் ஒழுங்குமுறை பருத்தி ஏலம் தொடங்குவது வழக்கம். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு நேற்று முதல் பருத்தி ஏலம் தொடங்கியது. எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்’ என்று கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நம்பிக்கையூட்டும் புதிய பயிர்க் காப்பீடு

விவசாயிகளின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை ஓரளவுக்குப் பூர்த்திசெய்யும் வகையில் 'பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. ரூ.17,600 கோடி மதிப்பிலான திட்டம் இது. இதை மத்திய, மாநில அரசுகள் இணைந்து மேற்கொள்ளும். காரிஃப் பருவத்தின்போது உணவு தானியங்கள், எண்ணெய் வித்துகளைப் பயிரிடும் விவசாயிகள், காப்பீட்டு நிறுவனம் நிர்ணயிக்கும் காப்பீட்டுச் சந்தாவில் 2% மட்டுமே செலுத்தினால் போதும். ராபி பருவத்தின்போது சந்தாவில் 1.5% மட்டுமே செலுத்தினால் போதும். இவ்விரு பருவங்களிலும் பயிரிடப்படும் தோட்டப் பயிர்கள், கரும்பு, பருத்தி உள்ளிட்ட பணப் பயிர்களுக்கு சந்தாவில் 5% மட்டும் செலுத்தினால் போதும். எஞ்சிய சந்தாவை மத்திய, மாநில அரசுகள் சமவிகிதத்தில் பகிர்ந்துகொள்ளும்.

இந்தக் காப்பீட்டில் பயிர் இழப்பு ஏற்பட்டால் விவசாயிகள் பெறக்கூடிய இழப்பீட்டுக்கு உச்ச வரம்பு கிடையாது. காப்பீடு செய்யும் அளவுக்கும் வரம்பு கிடையாது. இதுவரை சாகுபடிப் பரப்பில் 25%-ஐ மட்டுமே காப்பீடு செய்ய முடியும். இழப்பீடாகத் தரும் தொகைக்கு முன்னர் உச்ச வரம்பு இருந்தது, இப்போது அதுவும் நீக்கப்பட்டுவிட்டது.

புயல், மழை, பருவம் தப்பிய மழை, வறட்சி, நிலச்சரிவு, அறுவடையின்போதான மழை போன்ற காரணங்களால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு பெற முடியும். பயிர்ச் சேதத்தின் அளவையும் தீவிரத்தையும் மதிப்பிட செயற்கைக்கோள்கள், ஆளில்லா

சிறுவிமானங்கள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும். விவசாயிகள் தங்களுடைய கைபேசியிலும் புகைப்படங்களை எடுத்துப் பதிவேற்றம் செய்யலாம். இத்தகவல் கிடைத்து சரிபார்க்கப்பட்டதும் இழப்பீட்டு மதிப்பில் 25% விவசாயியின் வங்கிக் கணக்கில் உடனடியாகச் சேர்க்கப்படும். பெரிய விவசாயிகள் அதிகப் பரப்பளவில் பயிரிட்டிருந்தாலும் இதில் சேரவும், காப்பீடு பெறவும் எந்தத் தடையும் இல்லை. ஒரு மாநிலம் முழுக்க ஒரேயொரு காப்பீடு நிறுவனம்தான் இப்பணியை மேற்கொள்ளும். எனவே, இழப்பீடு கோருதல், பெறுதல் போன்றவை அலைச்சல் இல்லாமல் நடைபெறும்.

இத்திட்டத்தில் இன்னொரு சாதகமான அம்சம், பயிருக்குக் காப்பீடு செய்யப்படுவதால், அரசுடைமை வங்கிகளில் விவசாயச் செலவுகளுக்குக் கடன் பெறுவதும் எளிது. கடன் வேண்டாம் என்பவர்கள்கூட காப்பீடு செய்துகொள்ளலாம். இதற்கு முன்னால், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், திருத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் போன்றவை கொண்டுவரப்பட்டன. அவற்றுக்குப் போதிய வரவேற்பு இல்லாததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு நீக்கப்பட்டிருக்கின்றன.

நிலம் சொந்தமாக இல்லாமல் குத்தகைக்கு நிலத்தைப் பெற்று விவசாயம் செய்யும் விவசாயிகளும் இத்திட்டத்தில் பலன் பெற உரிய சட்டத் திருத்தங்களை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இத்திட்டத்தை அமலாக்கும்போது பிரச்சினைகளும் இடர்களும் தோன்றக்கூடும். அவற்றை மத்திய, மாநில அரசுகள் இணைந்து களைய வேண்டும். காப்பீட்டு நிறுவனங்களின் அதிகாரிகளும் ஊழியர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். விவசாயிகள் சங்கம், வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என்று அனைத்துத் தரப்பினரும் இணைந்து இதை வெற்றிகரமான திட்டமாக உருவாக்கி, விவசாயிகளின் தற்கொலை

நடைபெறாமல் தடுக்க வேண்டும். அரசின் மிக முக்கியமான கடமைகளில் ஒன்று அது!